# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST - 2008

## GGY 2.11 – INFORMATION SYSTEM AND ADVANCED CARTOGRAPHY

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – I

01. வழங்கப்பட்டுள்ள அக்ரா ஓயா வடிகாலமைப்புப் படத்தினைப் பயன்படுத்தி ஸ்ராலரின் விதிகளுக்கு இணங்க பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக

    i. வடிகால் தொகுதியின் கிளை அருவிகளுக்கான வடிகால் ஒழுங்குகளை வழங்குக.

    ii. ஒழுங்குகளையும் எண்ணிக்கைகளையும் அட்டவணைப்படுத்துவதோடு விகிதாசாரத்தினையும் கணிப்பிடுக.

    iii. ஓவ்வொரு அருவியின் நீளத்தையும் கணிப்பீடு செய்வதுடன், அவைகளின் சராசரி நீளத்தையும் கணிப்பிடுக.

02. கொடுக்கப்பட்டுள்ள படம் 2, ஹங்குராங்கெத்த நிலவிளக்கப்படத்தின் ஒரு பகுதிக்கான (1:50,000) பொதுமைப்படுத்தப்பட்ட சமஉயரக் கோட்டுப்படத்தினை கொண்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி பக்கப்பார்வைகளை தெளிவாகக் காட்டுக.

03. வழங்கப்பட்டுள்ள ஹங்குராங்கெத்த ஒரு பகுதி சமஉயரக் கோட்டுப்படத்தினை பயன்படுத்தி G.H. ஸ்மித் என்பவரது சார்தரைத்தோற்ற வரைபடத்தினையும் அதன் விகிதாசாரத்தினையும் கணிப்பிடுக.

04. தரப்பட்டுள்ள படம் 2, ஹங்குராங்கெத்த நிலவிளக்கப்படத்தின் ஒரு பகுதி பொதுமைப்படுத்தப்பட்ட சமஉயரக் கோட்டுப் பிரதேசத்தின் தரையியல் அம்சத்தினை உயரக் கணிப்பு நிகழ்தர வரைபட முறையினூடாக வெளிப்டுத்திக் காட்டுக.

### பகுதி – II

05. அ. உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள 1:40,000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த விமானப் ஒளிப்படத்தினைப் பயன்படுத்தி, அதில் காணப்படுகின் பௌதீக, பண்பாட்டு அம்சங்களை பொருத்தமான நிறங்கள், குறியீடுகள் என்பனவற்றைப் பயன்படுத்தி மேலமைந்த வரைபடத்தினை வரைந்து காட்டுக.

    ஆ. உம்மால் வரையப்பட்ட படத்தில் உள்ள பௌதீக, பண்பாட்டு அம்சங்களை விமர்சிக்குக.